16.03.2026 O.S. 218/2020 பி.வா.சா 1 திருமலைச்சாமி

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்குவிசாரணை

நான் காய்கறி வியாபாரம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். நான் அச்சன்புதூர் மற்றும் அருகில் கிராமத்திற்கு சைக்களில் காய்கறி வியாபாரம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். அவ்வாறு காய்கறி வியாபாரம் செல்லும் போது வாதி எனக்கு பழக்கம் என்றால் சரிதான். வழக்கு சொத்தானது 19.9.2001 தேதியிட்ட ஏற்பாடு ஆவணம் மூலம் எனக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். நான் வழக்கு சொத்தை கிரையம் கொடுக்க போவது தெரிந்து வாதி என்னிடம் கிரையம் வாங்க கேட்டார் என்றால் சரியல்ல. நான் கடனுக்காக எழுதி கொடுத்தேன். நான் வழக்கு சொத்திற்கு ரூ.1,60,000/-ம் கிரையம் பேசி அதற்கு முன் தொகையாக ரூ.1,50,000/-த்தை பெற்றுக்கொண்டு ரூ.10 ஆயிரம் செலுத்த வேண்டியிருந்தது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்பட்ட வா.சா.ஆ 2 கிரைய ஒப்பந்தத்தில் 1வது நபர் என்ற கையெழுத்து என்னுடையது என்றால் சரிதான். நான் கடனுக்காக அந்த கையெழுத்தை செய்து கொடுத்தேன். 2வது நபராக உள்ள கையெழுத்து வாதியின் கையெழுத்து என்றால் சரிதான். சாட்சிகள் முன்பு தான் இடைகால் சார்பதிவாளர் அலுவலகத்தில் கிரைய ஒப்பந்தம் செய்யப்பட்டது என்றால் பதிவு செய்ததால் தான் கடன் கொடுப்பதாக சொன்னதால் பதிவு செய்யப்பட்டது. கிரைய தேதியில் இருந்து 1-1/2 வருட காலமான 6.09.2018 தேதியில் மீத தொகை செலுத்தி கிரைய ஒப்பந்தத்தை நிறைவேற்றும் என எழுதப்பட்டுள்ளது என்றால் கடனுக்காக மட்டுமே எழுதப்பட்டது. வா.சா.ஆ 2 ன்படி வாதி கிரையம் முடிக்க தயாராக இருந்தும், பாக்கி கிரைய

தொகையை என்னிடம் கொடுத்து நான் வாங்க மறுத்து கிரையம் எழுதி கொடுக்க மறுத்தேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ 2 கிரைய ஒப்பந்தப்படி கிரைய முடித்து தராததால் வாதி 24.12.2019 தேதியில் எனக்கு அறிவிப்பு அனுப்பினார் என்றால் சரிதான். நான் அந்த அறிவிப்பை பெற்று கொண்டு 8.1.2020 ம் தேதி பதில் அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். அந்த பதில் அறிவிப்பில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை என்றால் சரியல்ல. நான் பல நபர்களிடம் வட்டிக்கு கடன் பெற்றுள்ளேன் என்றால் இல்லை. நான் ஏற்கனவே பாபு என்பவரிடம் ரூ.3 லட்சம் கடன் பெற்றுக்கொண்டு அந்த கடனை செலுத்தாதால் என்னுடைய சொத்தை பொறுத்து ஜப்தி செய்யப்பட்டுள்ளது என்றால் மோசடி ஆவணங்கள் மூலம் பெறப்பட்டுள்ளது. அந்த வழக்கு அ.வ.எண். 26/2020 ல்பற்றுகை செய்யப்பட்டுள்ளது என்றால் மோசடியாக செய்யப்பட்டுள்ளது. நான் அ.வ.எண். 26/2020 ல் கடன் வாங்கியதற்கு என் அசல் ஆவணங்களை நான் அந்த வழக்கின் வாதியான பாபு என்பவரிடம் கொடுத்துள்ளேன் என்றால் அவர் யார் என்றே தெரியாது. அந்த வழக்கில் பாபு தரப்பில் அசல் கிரைய ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் மோசடியாக செய்யப்பட்டுள்ளது. அ.வ.எண்.26/2020 ல் 3 லட்சமும், பின்வட்டியும் செலுத்த வேண்டும் என தீர்ப்பாகியுள்ளது என்றால் சரியல்ல. அந்த வழக்கில் பற்றுகை செய்யப்பட்டதால் நான் வாதிக்கு கிரைய ஆவணம் எழுதி கொடுக்காமல் காலதாமதம் செய்து வந்தேன் என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள ஏற்றுகை ஆற்றுதல் பரிகாரமும் அதற்கு மாற்றுபரிகாரமாக கோரியுள்ள கிரைய முன்பணத்தொகையை பொறுத்து பின்வட்டியுடன் செலுத்த

வேண்டும் என ஜார்ஜ் கோரி இந்த வழக்குதாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் வாதியிடம் ரூ.50 ஆயிரத்தை திருப்பி செலுத்தி விட்டதாக வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் உண்மையில் வாதியிடம் ரூ.50 ஆயிரம் செலுத்தியதற்கு ரசீது எதுவும் கொடுக்கவில்லை என்றால் ரசீது எதுவும் கொடுக்கவில்லை. வாதி கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கதக்கது என்றும், வழக்கு படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.